<u>உதவி அமர்வு நீதிபதி மற்றும் தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>

<u>முன்னிலை :–</u> திருமதி.J.கிறிஸ்டல் பபிதா எம்.எஸ்.சி., எம்.எல்.,
உதவி அமர்வு நீதிபதி மற்றும்
தலைமை நீதித்துறை நடுவர், தென்காசி.

2026 ம் ஆண்டு ஜுன் திங்கள் 02 ஆம் நாள் செவ்வாய் கிழமை

**<u>S.C.No. 411/ 2021</u>**

<u>C.N.R.No. TNTS02-002501-2021</u>

(செங்கோட்டை, குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தின்
முதல் நிலை பதிவேட்டு வழக்கு எண். 06 /2020)
(புளியரை காவல் நிலைய குற்ற எண். 124/ 2015)

| | | |
|---|---|---|
| அரசுக்காக :<br>காவல் ஆய்வாளர்,<br>புளியரை காவல் நிலையம். | : | ... குற்ற முறையிடுபவர் |
| | : | <u>எதிரிகள்</u>:–<br>1) கருப்பசாமி,<br>த.பெ. வேலுச்சாமி,<br>புதுகாலனி, அங்கன்காலடி.<br>2) சரவணகுமார்<br>த.பெ. வைரவன் ஆசாரி,<br>இல்லத்தார் தெற்கு தெரு,<br>தெற்குமேடு,<br>3) எபினேசர்,<br>த.பெ. ஜான்,<br>இந்திரா காலனி,<br>அங்கன்காலடி<br>தெற்குமேடு. |
| அரசுதரப்பில் எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகள் | | எதிரிகள் மீது பிரிவுகள் 4(b), 5(A) of Explosive Substances Act – ன்படி குற்றம் |

| | | |
|---|---|---|
| | | சுமத்தப்பட்டுள்ளது. |
| நீதிமன்றம் எதிரிகள் மீது வனைந்த குற்றச்சாட்டுகள் | | எதிரிகள் மீது பிரிவுகள் 4(b), 5(A) of Explosive Substances Act – ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டுள்ளது. |
| எதிரிகளின் கூற்று | | குற்றவாளிகள் இல்லை. |
| நீதிபதியின் நிர்ணயம் | | எதிரிகள் பிரிவுகள் 4(b), 5(A) of Explosive Substances Act – ன் கீழ் குற்றவாளிகள் இல்லை என்று தீர்மானிக்கப்படுகிறது. |
| தீர்ப்பு :– | : | முடிவாக, எதிரிகள் மீதான பிரிவுகள் 4(b), 5(A) of Explosive Substances Act –ன் படியான குற்றச்சாட்டுகள் அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றும், எனவே எதிரிகள் குற்றவாளிகள் அல்ல என்றும் முடிவு செய்து எதிரிகளை பிரிவுகள் 4(b), 5(A) of Explosive Substances Act – ன் படியான குற்றங்களிலிருந்து குற்றவியல் விசாரணை முறைச் சட்டம் பிரிவு 235(i)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. இவ்வழக்கில் எதிரிகள் விசாரணை காலத்தில் பிணையில் இருந்து வந்துள்ள நிலையில், மேல் முறையீட்டு காலத்திற்கு பின் எதிரிகளின் பிணை பத்திரம் ரத்து செய்திட உத்தரவிடப்படுகிறது.<br>இவ்வழக்கில் இந்நீதிமன்ற பிஆர் எண் 81/2025 ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள வெடிகுண்டுகளை செயலிழக்கம் செய்யப்பட்ட இடத்தில் எடுக்கப்பட்ட மண் மற்றும் |

| | | |
|---|---|---|
| | | வெடிகுண்டின் மூலப்பொருட்கள். வெடிகுண்டுகளை செயலிழக்கம் செய்யப்படும் முன் அந்த இடத்தில் எடுக்கப்பட்ட மண் ஆகியவை பயனற்ற பொருள்கள் என்பதினால் மேல்முறையீட்டு காலத்திற்குப் பின் அழிக்குமாறும், மேல் முறையீடு இருப்பின் மேல் முறையீட்டு உத்தரவுப்படி செயல்பட வேண்டு மென்றும் உத்தரவிடப்படுகிறது. |

இந்த வழக்கானது செங்கோட்டை, கற்றறிந்த நீதித்துறை நடுவர் அவர்களால் 24.08.2020 அன்று முதல் நிலை பதிவேட்டு வழக்கு எண் 06/2020 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, அதன்பிறகு இவ்வழக்கு மேல் விசாரணைக்காக திருநெல்வேலி முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு, அங்கு இந்த வழக்கானது **அமர்வு வழக்கு எண்.411/2021** ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, அங்கிருந்து இவ்வழக்கானது தென்காசி கூடுதல் உதவி அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டு அங்கு 08.09.2021 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பின்னர் தென்காசி முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்ற A.No.67/2024 01.04.2024 தேதியிட்ட உத்தரவுப்படி இந்நீதிமன்றத்திற்கு வரப்பெற்று 23.05.2024 அன்று இந்நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, இதுநாள் வரையில் பரிசீலனையில் இருந்து வந்த இவ்வழக்கு **20.05.2026** அன்று இந்நீதிமன்றம் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது, குற்றமுறையிடுபவர் தரப்பில் கூடுதல் அரசு குற்றத்துறை வழக்குரைஞர் திரு.R. சுரேஷ் அவர்கள் ஆஜராகியும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S. குலசேகரன் அவர்கள் ஆஜராகியும் இருதரப்பு வாதங்களைக் கேட்டும், இவ்வழக்கு சம்மந்தப்பட்ட ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் சீரான ஆய்வில் இருந்து

வந்த இந்த வழக்கில் இன்று (02.06.2026) இந்நீதிமன்றம் வழங்கும்....

**<u>தீர்ப்புரை</u>**

1. அரசுத்தரப்பில், கடந்த 11.09.2015 ம் தேதி பகல் 14.00 மணிக்கு புளியரை தெற்குமேடு செல்லும் குரங்கு நடை ரோட்டில் உள்ள வல்லம் சந்தானம் குத்தகை எடுத்திருக்கும் மாந்தோப்பு முன்பு எதிரிகள் மூன்று பேர்களும் தோட்டங்களில் பயிர்களை நாசம் செய்யும் காட்டுப் பன்றிகளை கொல்வதற்காக எவ்வித அரசு முன் அனுமதியில்லாமல் மனித உயிர்களுக்கும், விலங்குகளுக்கும் ஆபத்து விளைவிக்கக்கூடிய 7 நாட்டு வெடிகுண்டுகளை அவர்களே சட்ட விரோதமாக தயார் செய்து மேற்படி வெடிகுண்டுகளை பயன்படுத்துவதற்காக வைத்திருந்ததாகவும், எனவே எதிரிகள் பிரிவுகள் 4(b), 5(A) of Explosive Substances Act –ன் படியும் குற்றம் புரிந்துள்ளதாகவும் புளியரை காவல் நிலைய காவல் ஆய்வாளரால் குற்ற இறுதி அறிக்கையானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. எதிரிகளுக்கு குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திலேயே வழக்கின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச பிரிவு 207ன் கீழ் வழங்கப்பட்டு, எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள பிரிவுகள் 4(b), 5(A) of Explosive Substances Act –ன் படியான குற்றம் அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரிக்கத்தக்க குற்றமாக உள்ளதால் இந்த வழக்கு கு.வி.மு.ச. பிரிவு 209(அ) பிரிவின்படி அமர்வு நீதிமன்றத்திற்கு விசாரணைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

3. இரு தரப்பு வாதுரைகளையும் ஆவணங்களையும் பரிசீலனை செய்து எதிரிகள் குற்ற இறுதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் குற்றம் புரிந்திருக்கக்கூடும் என்று கருதுவதற்கு போதுமான ஆதாரங்கள் வழக்கில் இருந்தமையால் எதிரிகள் மீது பிரிவுகள் 4(b), 5(A) of Explosive Substances Act –ன் படியான குற்றச்சாட்டுகள் வனையப்பட்டு குற்றச்சாட்டுகள் பற்றி எதிரிகளிடம் விளக்கிக்கூறி வினவியபோது எதிரிகள் குற்றச்சாட்டுகளை மறுத்தார்கள். எதிரிகள் குற்றச்சாட்டுகளை மறுத்த காரணத்தால் அரசுத்தரப்பு

சாட்சிகளின் விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

4. அரசுத்தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.6 வரையான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5) அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியத்தின் சுருக்கம்:–

அசா–1 காவல் உதவியாளர் ஸ்தேவான் சேகர், முதல் நிலை காவலர் சத்யராகவேந்தர் மற்றும் காவலர் 2 ம் நிலை காவலர் அசா–2 சுந்தரய்யா ஆகியோர்கள் சகிதம் மதுவிலக்கு சம்பந்தமாக புளியரையிலிருந்து தெற்குமேடு செல்லும் ரோட்டில் குரங்குநடை ரோட்டில் ரோந்து செல்லும் போது எதிரே வந்த எதிரிகள் போலீசாரை கண்டதும் ஓட எத்தனித்துள்ளார்கள். போலீசார் அவர்களை பிடித்து விசாரித்த போது கருப்பசாமி என்பவர் கையில் வைத்திருந்த பையில் 7 நாட்டு வெடிகுண்டுகளை வைத்திருந்துள்ளார். அது பற்றிய விபரம் கேட்க தோட்டத்தில் பன்றி தொந்தரவு அதிகமாக இருப்பதால் பன்றிகளை அழிப்பதற்காக மூவரும் சேர்ந்து வெடிகுண்டுகளை தயார் செய்ததாக கூறியுள்ளார்கள். அரசு அனுமதியில்லாமல் வெடிபொருட்களை வைத்திருந்த குற்றத்திற்காக அசா–1 அன்று 14.00 மணிக்கு மூவரையும் கைது செய்துள்ளார். வெடிகுண்டு பொருட்களை அத்தாட்சி அசாஆ–1 மூலம் கைப்பற்றியுள்ளார். எதிரிகள் மற்றும் கைப்பற்றப்பட்ட சொத்துக்களை நிலையம் கொண்டு வந்து முதல் தகவல் அறிக்கை அசாஆ–2 பதிவு செய்துள்ளார். அசா–4 உதவி காவல் கண்காணிப்பாளர் ஜாமல் என்பவர் வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டு அன்றைய தினம் 17.00 மணியளவில் வழக்கின் சம்பவயிடம் சென்று சாட்சிகள் ஆறுமுகம் மற்றும் அசா–3 இசக்கி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் அசாஆ–4 மற்றும் வரைபடம் அசாஆ–5 தயார் செய்துள்ளார். பின்பு சாட்சிகளை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் வழக்கு கோப்பினை காவல் நிலையத்தில் ஒப்படைத்துள்ளார். அசா–6 காவல் துணை கண்காணிப்பாளர்

பிரதாபன் என்பவர் வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு இந்த வழக்கில் கைப்பற்றப்பட்டு செயலிழக்கப்பட்டு இருந்த நாட்டு வெடிகுண்டுகளின் பாகங்களை அன்றைய தினமே நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளார். பகுப்பாய்விற்காக சென்னை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. ராஜேஸ்வரன் என்பவர் மூலம் அனுப்பி வைத்துள்ளார். அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அசா–6 பணி மாறுதலில் சென்று விட்டமையால் அவருக்கு பிந்தைய ஆய்வாளர் திரு. சுரேஷ்குமார் அவர்களின் பார்வைக்கு வழக்கு கோப்பினை வைத்துள்ளார். அசா–5 காவல் ஆய்வாளர் சுரேஷ்குமார் என்பவர் வழக்கினை மேல் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு 29.12.2017 ம் தேதி சென்னை தடய அறிவியல் ஆய்வாளர் திருமதி. மஞ்சுளாதேவி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து தடய அறிவியல் அறிக்கை அசாஆ–6 பெற்றுள்ளார். சாட்சி பால்ராஜ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். 17.09.2019 ம் தேதி பாலசாந்தி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து வழக்கு தொடுப்பதற்கான முன் அனுமதி ஆணை அசாஆ–7 பெற்றுள்ளார். இவ்வழக்கின் புலன் விசாரணையை முடித்து எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார். இத்துடன் அரசுத்தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது.

6. அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்து எதிரிகளுக்கு பாதகமான அம்சங்கள் குறித்து எதிரிகளிடம் கு.வி.மு.ச 313(1)(ஆ) பிரிவின்படி வினவியபோது எதிரிகள் 'பொய் சாட்சி' என்று மறுத்துள்ளனர். எதிரிகள் தரப்பில், சாட்சிகள் 'இல்லை' என்று கூறியுள்ளார்கள்.

இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்ன வென்றால்,

7. அரசுத்தரப்பில், எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள பிரிவுகள் 4(b), 5(A) of Explosive Substances Act – ன் படியான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதாகும்.

**<u>8) தீர்வு–</u>**

அரசுத்தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தன்னுடைய வாதுரையில் எதிரிகள் மூன்று பேர்களும் தோட்டங்களில் பயிர்களை நாசம் செய்யும் காட்டுப் பன்றிகளை கொல்வதற்காக எவ்வித அரசு முன் அனுமதியில்லாமல் மனித உயிர்களுக்கும், விலங்குகளுக்கும் ஆபத்து விளைவிக்கக்கூடிய 7 நாட்டு வெடிகுண்டுகளை அவர்களே சட்ட விரோதமாக தயார் செய்து மேற்படி வெடிகுண்டுகளை பயன்படுத்துவதற்காக வைத்திருந்ததாக உள்ள இந்த வழக்கானது அரசுதரப்பு சாட்சியங்கள் மற்றும் ஆவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும் எனவே எதிரிகளுக்கு அதிகபட்ச தண்டனை வழங்கவேண்டும் என்றும் கூறியுள்ளார்.

9. எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தன்னுடைய வாதுரையில், எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை எனவும், சம்பவத்தை கண்ணுற்றதாக தனிநபர் சாட்சியங்கள் எதுவும் இல்லை எனவும், அரசுத்தரப்பில் இந்த வழக்கு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை எனவும், புள்ளி விபர கணக்கிற்காக எதிரிகள் மீது பொய்யாக இந்த வழக்கு புனையப்பட்டுள்ளது எனவும், எனவே சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்க வேண்டுமென்றும் கூறியுள்ளார்.

10. இரு தரப்பு வாதமும் கேட்கப்பட்டு வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. அரசுத்தரப்பில், எதிரிகள் மூன்று பேர்களும் தோட்டங்களில் பயிர்களை நாசம் செய்யும் காட்டுப் பன்றிகளை கொல்வதற்காக எவ்வித அரசு முன் அனுமதியில்லாமல் மனித உயிர்களுக்கும், விலங்குகளுக்கும் ஆபத்து விளைவிக்கக்கூடிய 7 நாட்டு வெடிகுண்டுகளை அவர்களே சட்ட விரோதமாக தயார் செய்து மேற்படி வெடிகுண்டுகளை பயன்படுத்துவதற்காக வைத்திருந்ததாக கூறப்பட்டு எதிரிகள் மீது பிரிவு 4(b), 5(A) of Explosive Substances Act – ன்படி குற்றச்சாட்டுகள் வனையப்பட்டுள்ளது.

11. அசா−1 காவல் உதவி ஆய்வாளர் ஸ்தேவான் சேகர் என்பவர் தன்னுடைய சாட்சியத்தில் சம்பவ நாள் மது விலக்கு சம்பந்தமாக குரங்குநடை ரோட்டில் ரோந்து செல்லும் போது எதிரிகள் போலீஸ் பார்ட்டியை பார்த்ததும் ஓட எத்தனித்தவர்களை பிடித்து விசாரிக்கும் போது எதிரி கருப்பசாமி என்பவர் தன் கையில் ஏழு நாட்டு வெடிக்குண்டுகளை வைத்து இருந்ததாகவும் தோட்டத்தில் பன்றி தொந்தரவு அதிகமாக இருப்பதால் பன்றிகளை அழிப்பதற்காக மூவரும் சேர்ந்து மேற்படி வெடி குண்டுகளை தயார் செய்ததாக கூறினார்கள் எனவும் எனவே எதிரிகளை கைது செய்து அவர்கள் வைத்திருந்த வெடிக்குண்டுகளை அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றி காவல் நிலையம் கொண்டு வந்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும் கூறியுள்ளார். அசா−2 தலைமை காவலர் சுந்தரையா என்பவர் சம்பவத்தை குறித்து சாட்சியம் அளித்துள்ளார்.

12. இந்த வழக்கில் சம்பவ நாள் அசா−1, அசா−2 ஆகியோர்கள் ரோந்து சென்றதாக எந்த ஆவணங்களும் அரசுத்தரப்பில் முன்னிலைப்படுத்தப்படவில்லை. எதிரிகள் வெடிக்குண்டு தயாரிக்க பயன்படுத்திய மூலப்பொருட்களை எங்கிருந்து வாங்கினார்கள் என்று அரசுத்தரப்பில் எந்த சாட்சிகளும் விசாரிக்கப்படவில்லை. எதிரிகள் வெடிகுண்டுகளை எங்கு வைத்து தயார் செய்தார்கள் என்றும் அரசுத்தரப்பில் எந்த சாட்சிகளும் இல்லை. சம்பவத்தை கண்ணுற்றதாக தனிநபர் சாட்சிகள் எவரும் அரசுத்தரப்பில் இல்லை. சம்பவத்தை குறித்து அசா−1, அசா−2 ஆகியோர்களின் சாட்சியங்களில் முரண்பாடுகள் உள்ளது. இந்நிலையில் எதிரி தரப்பில் கூறியவாறு புள்ளி விபர கணக்கிற்காக எதிரிகள் மீது இந்த வழக்கு பொய்யாக புனையப்பட்டுள்ளதா என்று இந்நீதிமன்றத்திற்கு சந்தேகம் எழுகிறது.

13. மேலே கூறிய விரிவான விளக்கங்களில் இருந்து, அரசுத்தரப்பில் இந்த வழக்கு சந்தேத்திற்கப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை எனவும், எனவே சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கலாம் என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

14. முடிவாக, எதிரிகள் மீதான பிரிவுகள் 4(b), 5(A) of Explosive Substances Act –ன் படியான குற்றச்சாட்டுகள் அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றும், எனவே எதிரிகள் குற்றவாளிகள் அல்ல என்றும் முடிவு செய்து எதிரிகளை பிரிவுகள் 4(b), 5(A) of Explosive Substances Act –ன் படியான குற்றங்களிலிருந்து குற்றவியல் விசாரணை முறைச் சட்டம் பிரிவு 235(i)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. இவ்வழக்கில் எதிரிகள் விசாரணை காலத்தில் பிணையில் இருந்து வந்துள்ள நிலையில், மேல் முறையீட்டு காலத்திற்கு பின் எதிரிகளின் பிணை பத்திரம் ரத்து செய்திட உத்தரவிடப்படுகிறது.

15. இவ்வழக்கில் இந்நீதிமன்ற பிஆர் எண் 81/2025 ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள வெடிகுண்டுகளை செயலிழக்கம் செய்யப்பட்ட இடத்தில் எடுக்கப்பட்ட மண் மற்றும் வெடிகுண்டின் மூலப்பொருட்கள். வெடிகுண்டுகளை செயலிழக்கம் செய்யப்படும் முன் அந்த இடத்தில் எடுக்கப்பட்ட மண் ஆகியவை பயனற்ற பொருள்கள் என்பதினால் மேல்முறையீட்டு காலத்திற்குப் பின் அழிக்குமாறும், மேல் முறையீடு இருப்பின் மேல் முறையீட்டு உத்தரவுப்படி செயல்பட வேண்டு மென்றும் உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்தாளருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை திருத்தம் மேற்கொள்ளப்பட்டு 2026ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 02 ஆம் நாள் ஆகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.06.02 18:58:50 +0530

உதவி அமர்வு நீதிபதி மற்றும்
தலைமை நீதித்துறை நடுவர், தென்காசி.

அரசு தரப்பு சாட்சிகள் : –

| அரசுத்தரப்பு சாட்சி எண் | சாட்சியின் பெயர் | விளக்கம் |
|---|---|---|
| 1 | திரு. ஸ்தேவான்சேகர் (காவல் உதவி ஆய்வாளர்) | அத்தாட்சி மற்றும் வழக்கு பதிவு செய்த சாட்சி |
| 2 | திரு. சுந்தரையா (தலைமை காவலர்) | கண்ணுற்ற சாட்சி |
| 3 | திரு. இசக்கி | பார்வை மகஜர் மற்றும் வரைபடம் சாட்சி |
| 4 | திரு. ஜமால் (உதவி காவல் கண்காணிப்பாளர்) | முதல் விசாரணை அதிகாரி |
| 5 | திரு. சுரேஷ்குமார் (காவல்ஆய்வாளர் ) | மேல் விசாரணை குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்த அதிகாரி |
| 6 | திரு. பிரதாபன் (காவல் துணை கண்காணிப்பாளர்) | மேல் விசாரணை அதிகாரி |

அரசு தரப்பு சான்றாவணங்கள் :–

| அரசுத்தரப்பு சான்றாவணம் எண் | சான்றாவணத்தின் விளக்கம் | நிரூபித்தவர் / சான்றளித்தவர் |
|---|---|---|
| 1. | அத்தாட்சி | அ.சா.1 |
| 2. | முதல் தகவல் அறிக்கை | அ.சா.1 |
| 3. | பார்வை மகஜரில் அசா–3 ன் கையெழுத்து | அ.சா.3 |
| 4 | பார்வை மகஜர் | அ.சா.4 |
| 5 | வரைபடம் | அ.சா.4 |
| 6 | தடய அறிவியல் அறிக்கை | அ.சா.5 |
| 7 | முன் அனுமதி ஆணை | அ.சா.5 |

அரசு தரப்பு சான்று பொருட்கள்:– இல்லை.

எதிரிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :– இல்லை

எதிரிகள் தரப்பு சான்று பொருள்கள் :– இல்லை

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.06.02 18:58:58 +0530

உதவி அமர்வு நீதிபதி மற்றும்
தலைமை நீதித்துறை நடுவர், தென்காசி.

<u>பின் குறிப்பு:–</u>

- ✓ எதிரிகள் விசாரணை காலத்தில் பிணையில் இருந்து வந்தனர்.
- ✓ சாட்சிகள் மூன்று நாட்களுக்கு மேல்விசாரிக்கப்படாமல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
- ✓ காவல் துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.